இலங்கை தரீக்கதுல் முப்லிஹீன் என்ற அமைப்பின் ஒன்றுகூடல் மண்டபம் அமைந்துள்ள இடமானது எந்தப்பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பது தொடர்பில் முறையான ஒரு தீர்மானத்தை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாக மன்றுக்குத் தெரிகின்றது.

அத்துடன் முறைப்பாட்டாளர் கூட குறித்த பிணக்குக்குட்பட்ட பகுதி காத்தான்குடி நகர சபைக்கு உட்பட்டதா அல்லது ஆரயம்பதி பிரதேச சபைக்கு உட்பட்டதா என்பது தொடர்பில் சந்தேகம் தெளிவின்மை உள்ளதாக அவரது சமர்ப்பணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்படி இரு திறத்தவர்களினுடைய சமர்ப்பணங்களையும் பார்க்கின்ற போது எல்லை நிர்ணயம் தொடர்பில் தெளிவின்மையுள்ள காரணத்தினாலும், குறித்த எல்லை நிர்ணயமானது ஒரு சமூக, சமய பிணக்கை தோற்றுவிக்கும் என்பதாலும், அது தொடர்பில் தகுந்த நீதிமன்றின் மூலம் அல்லது தகுந்த நடவடிக்கை மூலம் இரு பிரதேச சபைகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு எல்லையை தீர்மானித்ததன் பிற்பாடு இவ்வழக்கை தாக்கல் செய்யுமாறு மன்று அறிவுறுத்தல் வழங்கி இவ்வழக்கின் எதிரிகளை விடுவித்து கட்டளையாக்குகின்றது.

ஒப்பம்.......

நீதவான்,

நீதவான் நீதிமன்றம்,

மட்டக்களப்பு.

19.02.2013

RW/-

பக்கங்கள் 1 - 11 வரையுள்ளவை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் 11710/PC/12 கோவையிடப்பட்டுள்ள 2013.02.19ம் திகதிய கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

பிரதி செய்தவர் :-

சரி பாரத்தவர் :-

பதிவாளர்

19 FEB 2013